# ஏப்ரல்- 25 - புதன்

## நற்செய்தியாளர் புனித மாற்கு

### "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை பறைசாற்றுங்கள்" (மாற்.16:15)

**முதல் வாசகம் : 1பேதுரு : 5 5 – 14**

இளைஞர்களே, நீங்கள் முதியவர்களுக்குப் பணிந்திருங்கள். ஒருவர் மற்றவரோடு பழகும்போது எல்லாரும் மனத்தாழ்மையை ஆடையாய் அணிந்திருங்கள். ஏனெனில், "செருக்குற்றோரைக் கடவுள் இகழ்ச்சியுடன் நோக்குவார் தாழ்நிலையில் உள்ளவர்களுக்கோ கருணை காட்டுவார்." ஆகையால், கடவுளுடைய வல்லமைமிக்க கரத்தின்கீழ் உங்களைத் தாழ்த்துங்கள் அப்பொழுது அவர் ஏற்றகாலத்தில் உங்களை உயர்த்துவார். உங்கள் கவலைகளையெல்லாம் அவரிடம் விட்டு விடுங்கள். ஏனென்றால், அவர் உங்கள் மேல் கவலை கொண்டுள்ளார். அறிவுத்தெளிவோடு விழிப்பாயிருங்கள். உங்கள் எதிரியாகிய அலகை யாரை விழுங்கலாமெனக் கர்ச்சிக்கும் சிங்கம்போலத் தேடித்திரிகிறது.அசையாத நம்பிக்கை கொண்டவர்களாய் அதனை எதிர்த்து நில்லுங்கள். உலகெங்கிலுமுள்ள உங்கள் சகோதரர் சகோதரிகள் உங்களைப் போலவே துன்பங்களுக்கு உள்ளாகிறார்கள் என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள் அல்லவா?எல்லா அருளும் நிறைந்த கடவுள், இயேசு கிறிஸ்துவுக்குள் என்றும் நிலைக்கும் தம்மாட்சியில் பங்குகொள்ள உங்களை அழைத்திருக்கிறார். சிறிது காலத் துன்பங்களுக்குப்பின் அவர் உங்களைப் சீர்ப்படுத்தி, உறுதிப்படுத்தி, வலுப்படுத்தி நிலைநிறுத்துவார்.அவரது வல்லமை என்றென்றைக்கும் உள்ளது. ஆமென்.நம்பிக்கைக்குரிய சகோதரன் என நான் கருதும் சில்வான் வழியாகச் சுருக்கமாக உங்களுக்கு எழுதியுள்ளேன். உங்களை ஊக்குவிக்கவும் கடவுளுடைய மெய்யான அருளைப் பற்றிச் சான்று பகரவுமே எழுதினேன். இந்த அருளில் நிலைத்திருங்கள்.உங்களைப் போலவே தேர்ந்துகொள்ளப்பட்ட பாபிலோன் சபையாரும், என் மகன் மாற்கும் உங்களுக்கு வாழ்த்துக் கூறுகின்றனர்.அன்பு முத்தம் கொடுத்து நீங்கள் ஒருவர் மற்றவரை வாழ்த்துங்கள். இயேசு கிறிஸ்துவோடு இணைந்து வாழும் உங்கள் அனைவருக்கும் அமைதி உரித்தாகுக!

**பதில்பாடல் :** ஆண்டவரின் பேரன்பைப்பற்றி நான் என்றென்றும் பாடுவேன்.

**நற்செய்தி : மாற்கு 16 : 15 – 20**

இயேசு அவர்களை நோக்கி, "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள். நம்பிக்கைகொண்டு திருமுழுக்குப் பெறுவோர் மீட்புப் பெறுவர் நம்பிக்கையற்றவரோ தண்டனைத் தீர்ப்புப் பெறுவர். நம்பிக்கை கொண்டோர் பின்வரும் அரும் அடையாளங்களைச் செய்வர் அவர்கள் என் பெயரால் பேய்களை ஓட்டுவர் புதிய மொழிகளைப் பேசுவர். பாம்புகளைத் தம் கையால் பிடிப்பர். கொல்லும் நஞ்சைக் குடித்தாலும் அது அவர்களுக்குத் தீங்கு இழைக்காது. அவர்கள் உடல் நலமற்றோர்மீது கைகளை வைக்க, அவர்கள் குணமடைவர்" என்று கூறினார். இவ்வாறு அவர்களோடு பேசிய பின்பு ஆண்டவர் இயேசு விண்ணேற்றமடைந்து கடவுளின் வலப்புறம் அமர்ந்தார். அவர்கள் புறப்பட்டுச் சென்று எங்கும் நற்செய்தியைப் பறைசாற்றினர். ஆண்டவரும் உடனிருந்து செயல்பட்டு, நிகழ்ந்த அரும் அடையாளங்களால் அவர்களுடைய வார்த்தையை உறுதிப்படுத்தினார்.)

**தியானம்:** இயேசு தம் சீடர்களுக்கு விட்டுச் சென்ற இறுதிப்பணி உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை பறைசாற்ற வேண்டுமென்று. இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவே இயேசு சீடர்களை அழைக்கின்றார், திருத்தூதர்களை தேர்ந்து கொள்கின்றார். நற்செய்தி அறிவிக்கப்பட வேண்டுமென்றால் அந்த நற்செய்தி என்ன என்பதை அறிந்துகொள்ள வேண்டும். அதற்காகத்தான் இயேசு திருத்தூதர்களை தேர்ந்து கொள்ளும் நோக்கம் என்னவென்றால் "தம்மோடு இருக்கவும்" (மாற்.3:14) என்றும் தன்னைப்பின் தொடர்ந்து வந்த திருமுழுக்கு யோவனின் சீடர்களிடம் "வந்து பாருங்கள்" (யோவா.1:39) என்று சொல்லி முதலில் தன்னை அனுபவிக்க அழைப்பு விடுக்கின்றார். இயேசுவை அனுபவிக்காமல் அவரைப்பற்றிய நற்செய்தியை பறைசாற்ற முடியாது. இயேசுவை அனுபவிக்க கடவுளுடைய வல்லமைமிக்க கரத்தின்கீழ் நம்மைத் தாழ்த்த வேண்டும் என்று இன்றைய முதல் வாசகம் நமக்கு அழைப்புவிடுக்கின்றது. நாம் நம்முடைய சுமைகளை, கவலைகளை சுமந்துகொண்டு இருக்கும்வரை கடவுளுடைய எண்ணத்தை, சுமைகளை, விருப்பங்களை நாம் சுமக்க முடியாது. எனவே உன்னுடைய இந்த உலகரீதியான கவலைகளை கடவுளிடம் விட்டுவிட்டு, கடவுளுடைய இதய ஏக்கங்களை நமதாக மாற்ற முயற்சிக்க வேண்டும். இரண்டாவதாக, இந்த உலகத்தில் நாம் அனுபவிக்கும் துன்பங்கள், வேதனைகள், சோதனைகள் நமது வாழ்வை கடவுளிடமிருந்து பிரித்துவிடாமல் பாதுகாக்க, சாத்தானை எதிர்த்து நிக்க அறிவுத்தெளிவோடு, விழிப்பாயிருக்க வேண்டும். அறிவுத் தெளிவு என்பது கடவுளில் நான் யார் என்ற சத்தியத்தை மறக்காமல் இருப்பது. நான் கடவுளுக்குச் சொந்தமானவன். கடவுளில் இருக்கும் எல்லா வல்லமையும், ஆற்றலும், அதிகாரமும் எனக்கு உண்டு என்பதை நம்புவது. இயேசு நமக்கு பாம்புகளின் மீதும், தேள்களின் மீதும் மிதித்து நடப்பதற்கு அதிகாரம் அளித்திருக்கின்றார். (லூக்.10:19, மாற்.16:17-18) எனவே நான் எந்தவித சாத்தானின் சோதனைகளுக்கும் அஞ்சத் தேவையில்லை என்ற தெளிவு. விழிப்பாயிருப்பது என்பது என்னுடைய கடமை. என்ன? எதற்காக நான் இங்கே இருக்கின்றேன்? என்னுடைய இலக்கு என்ன? என்பதை மறக்காமல் இருந்து இதயத்தை நம்முடைய இலக்கிலே கட்டிப்போடுவது. எனவே அறிவுத்தெளிவோடு, விழிப்பாயிருப்பவர்கள் தான் இயேசுவின் நற்செய்தியை உலகத்திற்கு பறைசாற்ற முடியும்.